| | | |
|---|---|---|
| சாட்சி : DW1<br>அறிவழகன், த/பெ ராமசாமி | அ.வ.எண்.24/2016 | 10.07.2026 |

**குறுக்கு விசாரணை**

1. எனது அம்மா அ.வ.எண்.24/2016 ல் 6ம் பிரதிவாதி என்றால் சரிதான். நான் மேற்படி வழக்கில் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் மேற்படி வழக்கில் எனது அம்மாவிற்கு பவர் ஏஜெண்டாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். எனது அம்மாவிற்கு சுமார் 75 வயது இருக்கும். எனது அம்மா படிக்கவில்லை, கையொப்பம் மட்டும் செய்வார். பி.வா.சா.ஆ.4 ஆவணம் பதிவு செய்யப்பட்ட போது பதிவாளர் அலுவலகத்திற்கு யார் யார் சென்றார்கள் என்றால் எனது அம்மா பட்டு, தாத்தா தைலான், ஆவண எழுத்தர் அன்பானந்தம், சாட்சி கையொப்பம் செய்த அழகர்சாமி, கோவிந்தராஜ், தனகோடி ஆகியோர் சென்றார்கள். நான் அன்றைய தினம் பதிவு அலுவலகத்திற்கு செல்லவில்லை.
2. பி.வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு எனது தாத்தா தான் விவரம் சொன்னார். மேற்படி பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை எனது தாத்தா சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டது. மேற்படி விவரம் எனக்கு நேரடியாக தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் பக்கம் 4 முதல் 7 வரை அடித்தல், திருத்தல் உள்ளது என்றாலும், இடைச்செறுகளாக சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் சொல்ல சொல்ல தட்டச்சு செய்யப்பட்டிருந்தால் மேற்படி ஆவணத்தில் அடித்தல், திருத்தல் ஏற்பட வாய்பில்லை என்றால்

சரியல்ல.

3. எனது தாத்தா தைலான் கோவிலடியில் 2000 – 2007 ம் ஆண்டு அவர் இறக்கும் வரை எங்கள் வீட்டில் தான் இருந்தார். திருமங்கலத்தை சேர்ந்த எங்கள் சமுதாயத்தை சேர்ந்த மக்களுக்கும், எங்கள் குடும்பத்திற்கும் எந்த விரோதமும் இல்லை என்றால் எனக்கு தெரிந்தவரை இல்லை. அதுபோல் எங்கள் கோவிலடியை சேர்ந்த எங்கள் சமுதாயத்தை சேர்ந்தவருக்கும் விரோதம் இல்லை என்றால் எனக்கு தெரிந்தவரை இல்லை. கோப்பிற்கும், திருமங்கலத்திற்கும் சுமார் 20 கி.மீட்டர் தூரம் இருக்கும். கோவிலடிக்கும், கோப்பிற்கும் சுமார் 25 கி.மீ தூரம் இருக்கும். கௌதரசநல்லூரை சேர்ந்த அழகர்சாமி என்பவர் பி.வா.சா.ஆ.4 ல் சாட்சி கையொப்பம் செய்துள்ளார்.

4. நான் 8 – 10 ம் வகுப்புவரை இலால்குடி உயர் நிலைப்பள்ளியில் படித்தேன். இலால்குடியிலிருந்து, திருமங்கலத்திற்கு சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும். பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் திருமங்கலத்தை சேர்ந்த நபர்கள் யார் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையில் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தை எனது தாத்தா தைலான், எனது அம்மா பட்டுவிற்கு எழுதி வைத்திருந்தால் திருமங்கலத்தை சேர்ந்த எனது சமுகத்தை சேர்ந்தவர்கள் கையொப்பம் செய்திருப்பார்கள் என்றாலும், மேற்படி ஆவணம் புனையப்பட்ட ஆவணம் என்பதால் தான் மேற்படி ஆவணத்தில் திருமங்கலம் மற்றும் கோவிலடியை சேர்ந்தவர்கள் யாரும் கையொப்பம்

செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ 4 ஆவணத்தில் சாட்சி கையொப்பம் செய்தவர்கள் எங்களது குடும்ப நண்பர்கள், எனது தாத்தாவின் நிலை தெரிந்து மேற்படி நபர்கள் சாட்சி கையொப்பம் செய்தார்கள்.

5. கோவிலடி கூட்டுறவு வங்கிக்குட்பட்ட ஆள்வரைபற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வேளாண்மை கூட்டுறவு வங்கி ஆள்வரைக்குள் நிரந்தரமாக குடியிருந்தாலோ அல்லது மேற்படி ஆள்வரைக்குள் சாகுபடி நிலம் இருந்தாலோ மட்டுமே மேற்படி வங்கியில் உறுப்பினராக சேர முடியும் என்றால் எனது தாத்தாவின் வாக்காளர் அடையாள அட்டையில் கண்ட முகவரியின் அடிப்படையில் மேற்படி வங்கி கணக்கு ஏற்படுத்தப்பட்டது. மேற்படி வாக்காளர் அடையாள அட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எந்த அடிப்படையில் மேற்படி கூட்டுறவு வங்கி கணக்கு எனது தாத்தா பெயரில் ஏற்படுத்தப்பட்டது என்றால் எனது அம்மாவின் வேண்டுகோளுக்கு இணங்க எனது தாத்தா பெயரில் கணக்கு துவங்கப்பட்டது.

6. வாக்காளர் அடையாள அட்டையான பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் வடக்கு குடியான தெரு, கோவிலடி என கண்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் பக்கம் 2ல் தைலானின் முகவரி 1/117 கீழத்தெரு, திருமங்கலம் என கண்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முகவரி தைலானின் வீட்டு முகவரியாகும். அதை தான் எனது தாயாருக்கு தான செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார்.

பி.வா.சா.ஆ.4 ஆவணம் பக்கம் 2 ல் கோவிலடி ஆரம்ப விவசாய கடன் கூட்டுறவு வங்கி AC 931 என கண்டுள்ளது. பி.வா.சா.ஆ.7 ஆவணத்தில் 05.10.2004 ல் ரூ.500 மட்டும் செலுத்தியுள்ளதாக கண்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணம் 01.10.2004 ல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 01.10.2004 ஏற்படுத்தப்பட்ட பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் அதற்கு பின்னிட்டு 05.10.2004 ல் துவங்கப்பட்ட கூட்டுறவு வங்கி கணக்கு அட்டையை சரி பார்த்ததாக எவ்வாறு கண்டுள்ளது என்றால் அது சம்மந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க 20.07.2026 அன்று குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**Signed,**
அறிவழகன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

PRAGATHEESHWARAN SUBRAMANIAN

Digitally signed by PRAGATHEESHWARAN SUBRAMANIAN

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
இலால்குடி.